**மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை**

**O.S. No. 28 / 2023**

**வா.சா.1 – புவனேந்திரன்** **23.06.2025**

**1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :–**

தாவா சொத்தின் சர்வே எண் 49/2 ஆகும். தாவா சொத்து சர்க்கார் புறம்போக்கு கிராம நத்தம் என அ பதிவேட்டில் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தை 40 வருடங்களாக நான் அனுபவம் செய்வதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. சர்வே எண் 49/2 ல் வேறு நபர்களும் அனுபவம் செய்து வருகிறார்கள். மற்ற நபர்களுக்கும் அரசால் பட்டா வழங்கப்பட்டுள்ளது. தாவா சொத்தை தவிர எனக்கு வேறு சொத்துக்கள் உள்ளது. வேறு சொத்துக்கள் உள்ளதால் தான் எனக்கு அரசு தாவா சொத்திற்கு பட்டா வழங்கவில்லை என்றால் சரியல்ல. எனக்கு 4ம் பிரதிவாதிக்கும் இடையே ஏற்கனவே வழக்கு நடந்தது. அந்த வழக்கில் தீர்ப்பு வந்துவிட்டது. அந்த தீர்ப்பின் பேரில் தான் 4ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதியிடம் மனு கொடுத்துள்ளார் என்றால் அந்த மனுவிற்கும் தாவா சொத்திற்கும் சம்மந்தம் இல்லை. தாவா சொத்து சம்மந்தமாக 2ம் பிரதிவாதியிடம் பட்டா சம்மந்தமான விசாரணை நிலுவையில் உள்ளதால் தான் நான் கோரியுள்ள பட்டா வழங்காமல் நிறுத்திவைக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**4ம்பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:**

நான் தமிழ்நாட்டில் உள்ள ஒரு பிரதான கட்சியில் அரசியல்வாதியாக உள்ளேன் என்றால் சரிதான். அதுபோல நான் கட்சியிலும் அரசிலும் முக்கிய பொறுப்பு வகித்துள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்தின் மொத்த சர்வே எண் 49/2 ஆகும். அதன் மொத்த விஸ்தீரணம் 2 ஏக்கர் 44 செண்டு ஆகும். நான் இந்த வழக்கை 2747 சதுர அடிக்கு மட்டும் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி 2747 சதுரடி 2 ஏக்கர் 44 செண்டில் எந்த பகுதியில்

அமைந்துள்ளது என்று எனது பிராதில் சொல்லவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தின் நான்குமால் சொல்லவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து எனக்கு பாத்தியப்பட்டது என விளம்புகை பரிகாரம் மற்றும் எனது அனுபவத்தை 4ம் பிரதிவாதி இடையூறு செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்தை அனுபவத்தின் அடிப்படையில் பாத்தியம் கோரியுள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்து சம்மந்தமாக உரிமை ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. தாவா சொத்தின் நான்குபக்கமும் 4ம் பிரதிவாதியின் இடம் உள்ளது என்றால் இல்லை நத்தம் புறம்போக்கு ஆகும். 4ம் பிரதிவாதி தாவா சொத்தை பொறுத்து வாதியாக இருந்து மானாமதுரை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் மு.வ.எண் 22/2017 தாக்கல் செய்திருந்தார்கள் என்றால் சரிதான். அந்த வழக்கில் தீர்ப்பு நகலை வாங்கி நான் பார்க்கவில்லை. மேற்படி வழக்கில் தாவா சொத்தில் சென்ட்ரிங்வீடு இருந்தது என்று எதிர்வாதம் செய்திருந்தேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கிலும் வா.சா.ஆ.3 கட்டிட வரைபட அனுமதி குறித்து சொல்லியிருந்தேன். மேற்படி வழக்கு என்னிடம் வாடகை கேட்டு போட்டிருந்தார்கள். கிராமநத்தம் என்பதால் வாடகை கொடுக்கமுடியாது என்று கூறிவிட்டேன். வா.சா.ஆ.3 கட்டிட வரைபட அனுமதியில் சர்வே எண் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் குறிப்பிடப்படவில்லை. தாவா சொத்தின் மொத்த சர்வே எண் 49/2 யை மன்னர் குடியிருப்பு என்று சொல்வார்கள் என்றால் இல்லை. வா.சா.ஆ.3 ஆவணத்தில் மன்னர் குடியிருப்பு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ஆவணத்தில் தேவஸ்தான இடம் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆரம்பத்தில் தாவா சொத்து தேவஸ்தானத்திற்கு பாத்தியப்பட்ட இடம் என்று நினைத்து வாடகை செலுத்திவந்தேன் என்றால் சரிதான். அதன்பின்னர் தான் கிராம நத்தம் என தெரியவந்தது. 2013 முதல் வாடகை செலுத்துவதை நிறுத்திவிட்டேன்

என்றால் ஞாபகம் இல்லை. நான் வாடகை செலுத்துவதை நிறுத்தியதால் தான் என்னை வெளியேற்றுவதற்கும் வாடகை பாக்கியை வசூல் செய்வதற்கும் ஒரு வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 கட்டிட வரைபட அனுமதி வாங்குவதற்கு என்ன ஆவணம் கொடுத்தேன் என்று ஞாபகம் இல்லை. வா.சா.ஆ.3 எனது அரசியல் செல்வாக்கை பயன்படுத்தி வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. தாவா மொத்த சொத்தும் தேவஸ்தானத்திற்கு பாத்தியப்பட்டது என்று அரசுக்கும் தேவஸ்தானத்திற்கும் இடையே பிரச்சனை உள்ளது என்றால் சரிதான். பல வழக்குகளில் தாவா சொத்து தேவஸ்தானத்திற்கு பாத்தியப்பட்டது என்று தீர்ப்பாகியுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.5 மரவரி ரசீது அரசுக்கு பாத்தியப்பட்ட இடத்தில் நான் மரம் வளர்த்ததால் வரி செலுத்தியுள்ளேன். வா.சா.ஆ.5 அரசாங்க சொத்தில் மரம் வைத்து அனுபவிப்பதால் அரசாங்கத்திற்கு செலுத்தப்பட்ட தண்டதீர்வை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. இந்த வழக்கில் சொல்லியுள்ள ஓட்டுவீடு தகர செட் குறித்து முன்வழக்கில் சொல்லியுள்ளேனா என்றால் ஞாபகம் இல்லை. முன்வழக்கில் ஓட்டுவீடு, தகரசெட் பற்றி சொல்லவில்லை இந்த வழக்கில் பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. முன்வழக்கிற்கு முன்னதாக 4ம் பிரதிவாதி தரப்பில் வாடகைதாரர் நிலசுவான்தார் உறவை ரத்து செய்வதாக எனக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டது என்றால் சரிதான். முன்வழக்கில் தாவா சொத்தை காலி செய்து 3 மாதத்தில் 4ம் பிரதிவாதி வசம் ஒப்படைக்கவேண்டுமென்று தீர்ப்பானது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த மேல்முறையீட்டு வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் ஞாபகம் இல்லை. நான் உயிர்நீதிமன்றத்தில் இரண்டாவது மேல்முறையீடு தாக்கல் செய்தேனா என்றால் தாக்கல் செய்தேன். இந்த வழக்கு தாக்கல் செய்ததால் இரண்டாவது மேல்முறையீடை திரும்ப பெற்றுக்கொண்டேன். இரண்டாவது மேல்முறையீடு தாக்கல் செய்த விபரத்தை எனது பிராதிலும் நிரூபண வாக்குமூலத்திலும்

சொல்லவில்லை என்றால் சரிதான். எதற்காக 4ம் பிரதிவாதியை இந்த வழக்கில் தரப்பினராக சேர்த்துள்ளேன் என்றால் 4ம் பிரதிவாதி என் மீது வழக்கு போட்டதால் அவர்களை சேர்த்துள்ளேன். நான் இந்த வழக்கில் 4ம் பிரதிவாதி மீது மட்டும் பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் ஞாபகம் இல்லை. வா.சா.ஆ.4 வரி ரசீதில் வேறு ஒருவர் பெயர் எழுதப்பட்டு அது அடிக்கப்பட்டு எனது பெயர் எழுதப்பட்டுள்ளது என்றால் அது தவறுதலாக செய்துள்ளார்கள். வா.சா.ஆ.4 வரி ரசீது 1998ல் போடப்பட்டது. 1996ல் முதல்அமைச்சராக பதவி ஏற்றவுடன் கருணாநிதி அவர்கள் முதல் கையொப்பமாக காலிமனையிடங்களுக்கு விதிக்கப்படும் வரியை ரத்து செய்து உத்திரவிட்டார் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. 1996 ல் வரி ரத்து செய்யப்பட்ட பின்பு 1998ல் போடப்பட்ட வா.சா.ஆ.4 ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.10 ஆவணத்தில் கணபதியாபிள்ளை கீழபூங்கொடி செட்டியார் இருப்பு சென்னை என்றும் அதற்கு கீழ் புவனேந்திரன் த.பெ.அம்பலம் சேர்வை என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.10 பதிவேடு எதற்காக அரசாங்கத்தால் ஏற்படுத்தப்பட்டது என்றால் அனுபத்தை காட்டுவதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ளது. வா.சா.ஆ.10 எந்த அதிகாரியால் எந்த உத்திரவின் பேரில் ஏற்படுத்தப்பட்டது என்று எனக்கு தெரியாது. அரசு அதிகாரியை விசாரித்தால் தான் மேற்படி பதிவேட்டின் விபரம் தெரியும் என்றால் சரிதான். அரசாங்கம் தாவா சொத்திற்கு எனக்கு பட்டா கொடுத்துவிட்டார்களா என்றால் பட்டா கொடுப்பதற்காக அறிவிப்பு கொடுத்துள்ளார்கள். தனி தாசில்தார் மனை வாடகை பிரிவு எனக்கு அறிவிப்பு அனுப்பியுள்ளார். அந்த அறிவிப்பு எனது கையில் இல்லை வீட்டில் உள்ளது. இந்த வழக்கு தாக்கல் செய்த பின்பு அறிவிப்பு அனுப்பியுள்ளார். தாவா சொத்தின் மொத்த சர்வே எண்ணில் சில நபர்களுக்கு அரசு பட்டா வழங்கியுள்ளதை ரத்து செய்ய 4ம் பிரதிவாதி கொடுத்த மனுவின் பேரில் விசாரணை நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். 4ம் பிரதிவாதியிடம் நான்

வாடகைதாரர் இல்லை அரசும் எனக்கு பட்டா வழங்கவில்லை என்பதால் நான் தாவா சொத்தில் ஆக்கிரமிப்பாளர் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வீட்டு வரி ரசீது மின் கட்டண ரசீது ஆகியவை எனது அரசியல் செல்வாக்கை பயன்படுத்தி பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. முன்வழக்கில் தாவா சொத்தின் சுவாதீனத்தை 4ம் பிரதிவாதியிடம் ஒப்படைக்க வேண்டும் என தீர்ப்பான பின்பு 4ம் பிரதிவாதியை அலைக்கழிக்கவேண்டும் என்ற எண்ணத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் எந்தவிதமான பரிகாரமும் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

சார்பு நீதிபதி
**மானாமதுரை**